# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

பகுதி - 1

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்க.** 6×1=6

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ________

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்

இ) பெருஞ்சித்திரனார் ஈ) வ.உ. சிதம்பரனார்

4) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________

அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு

5) செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ________

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

6) செவ்விந்தியர்கள் நிலத்தைத்________ மதிக்கின்றனர்

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.** 6×1=6

1) எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________

2) பொருள் தருக:-

1. நாணம் 2. செய்யுள்

3) பிரித்து எழுதுக:-

1. என்றென்றும் 2. நீளுழைப்பு

4) சேர்த்து எழுதுக:-

1. பால் + ஊறும் 2. வானம் + அறிந்து

5) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சோறு ________ (தின்/உண்)

2. கோழி ________ (கூவும்/கொக்கரிக்கும்)

6) உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

1. போனான் ________

2. வாழிய ________

பகுதி - 2

**இ) 1) சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக** 2×1=2

அ) உலகம் தமிழ் மொழி வாழட்டும் உள்ள வரையிலும்

ஆ) கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2) அகர வரிசைப்படுத்துக 2

எழுத்து, ஒலி வடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம், ஈசன், ஐயம்

3) தொடரில் அமைக்க 2×1=2

அ) உடன்பிறந்தார் ஆ) வேடிக்கை

4) தமிழெண்களை எழுதுக. 4×½=2

அ) 22 ஆ) 17 இ) 9 ஈ) 30

5) கலைச்சொற்களை எழுதுக. 2×1=2

1) Valley 2) Vowel

பகுதி - 3

ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- 5×2=10

1) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
2) உலகம் எவற்றால் ஆனது?
3) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
4) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
5) புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
6) நிலத்திற்கும், செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
7) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

உ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2×3=6

1) எழுத்துச்சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
2) மெய்எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
3) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
4) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

பகுதி - 4

ஊ) அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

அ) வாழ்க நிரந்தரம் எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து பாடலை அடிமாறாமல் எழுதுக.

ஆ) 'யவர்' என முடியும் குறளை எழுதுக.

பகுதி - 5

எ) எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி. 1×7=7

1) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக?
2) தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.
3) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com